**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 27/2015**

**Deposition of Witness for : PW 14**

| | |
|---|---|
| **Name** | **:** திரு. ஜான்துரை |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21-04-2022.**

**முதல் விசாரணை** -

நான் தற்போது வேட்டவலம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும். 2013ம் ஆண்டு 4ம் மாதம் மாலை 6 - 6.45 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது வேட்டவலம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், குழந்தைசாமியும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.17. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

அ.சா.11 பெரியநாயகியின் பேத்தியை நான் திருமணம் செய்துகொண்டுள்ளேன். குழந்தைசாமி கடந்த 20 ஆண்டுகாலமாக பக்கவாத நோய் வந்து நடக்கமுடியாமல் வீட்டில் இருந்து வந்தார் என்றால் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். ஆனால் கடந்த 20 ஆண்டு காலமாக இல்லை. நான் தற்போது பெங்களூரில் வேலை செய்துகொண்டு இருக்கிறேன். சம்பவ காலத்தில் நான் சென்னையில் எம்.பி.ஏ. படித்துக்கொண்டு இருந்தேன் என்றால் சரிதான். சார்லஸ் இறந்து 2 நாள் கழித்து என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். இறந்து போனவரின் அக்கா மகளை நான் திருமணம் செய்து கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- ஜான்துரை

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.